# Textile Machinery exhibition in Noida to boost Global competitiveness




**SALEM, AUG 22:**
An awareness programme was held in Salem to invite textile manufacturers to participate in the 12th International Textile Machinery Exhibition to be held in Noida from December 4 to 9.

Senthilkumar, Treasurer of the India ITME Society, said the exhibition aims to promote global textile production, showcase technological innovations and strengthen the competitiveness of the textile industry.

Experts from 95 countries are expected to participate, while around 1.5 lakh visitors are likely to attend. He said the event would serve as a global platform for the textile machinery and engineering sectors. Ganesan, President of the Indian Chamber of Commerce and Industry, said India's textile sector had faced stagnation over the past four years due to rising yarn prices and intense global competition.

He said several textile units in Tamil Nadu had shut down and stressed the need to revive the sector. General Secretary Sampathkumar and several textile manufacturers attended the programme.

# ஜவுளி உற்பத்தி, புதிய கண்டுபிடிப்புகள், உலகளாவிய போட்டித்தன்மையை மேம்படுத்த 95 நாடுகள் பங்கேற்கும் இந்திய சர்வதேச ஜவுளி இயந்திர கண்காட்சிக்கு திருப்பூர் பின்னலாடை உற்பத்தியாளர்களுக்கு அழைப்பு




திருப்பூர், ஆக. 18–
எதிர்காலத்திற்கு ஏற்ற ஜவுளி மற்றும் தொழில்நுட்பச் சூழலை உருவாக்க இந்திய ஐடிஎம்இ சொசைட்டி சார்பில் நொய்டாவில் டிசம்பர் 4–ந்தேதி முதல் 9–ந்தேதி வரை 6 நாள் இந்திய சர்வதேச ஜவுளி இயந்திரக் கண்காட்சி நடைபெற உள்ளது. இதில் 95 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள், 1,800க்கும் மேற்பட்ட கண்காட்சியாளர்கள் பங்கேற்க உள்ளனர். இந்த நிலையில் இது குறித்த ரோடு ஷோ திருப்பூரில், திருப்பூர் எக்ஸ்போர்டர்ஸ் அசோசியேஷனில் நடைபெற்றது. இதில் திருப்பூர் எக்ஸ்போர்ட் அசோசியேசனை சேர்ந்த பின்னலாடை உற்பத்தியாளர்கள் மற்றும் ஏராளமான ஜவுளி உற்பத்தியாளர்கள் திருப்பூரைச் சேர்ந்த ஜவுளி தொழிலைச் சேர்ந்த சங்க நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர் அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. ஜவுளி உற்பத்தி, புதிய கண்டுபிடிப்புகள், உலகளாவிய போட்டித்தன்மையை மேம்படுத்த 95 நாடுகள் பங்கேற்கும் இந்திய சர்வதேச ஜவுளி இயந்திர கண்காட்சிக்கு திருப்பூர் பின்னலாடை உற்பத்தியாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. ஜவுளி மற்றும் ஜவுளிப் பொறியியல் துறையில் இந்தியா ஒரு உலகளாவிய மையமாக இருப்பதை வலுப்படுத்தும் வகையிலும் இந்தியாவின் தேசியக் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்லும் வகையிலும் 'இந்தியா ஐடிஎம்இ 2026' கண்காட்சி நடைபெற உள்ளது. இந்த நிகழ்வு முக்கியப் பங்கு வகிக்கும்.இந்தக் கண்காட்சியில் நார், நூல் மற்றும் துணி வகைகள் முதல் முழுமையாகத் தயாரிக்கப்பட்ட ஆடைகள் மற்றும் தொழில்நுட்ப ஜவுளிகள் வரை ஒட்டுமொத்த ஜவுளித் துறைக்கான அதிநவீன கண்டுபிடிப்புகள், புதிய தொழில்நுட்பங்கள் காட்சிப்படுத்தப்பட உள்ளன.இது இந்திய ஐடிஎம்இ சொசைட்டி நடத்தும் 12–வது கண்காட்சியாகும். இதுவரை இல்லாத வகையில் சுமார் 2 லட்சத்து 40 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவில் 18 அரங்குகளில் நடைபெறும் மிகப்பெரிய கண்காட்சியாக இது இருக்கும். உலகளாவிய ஜவுளித் துறையை இணைக்கும் இந்த கண்காட்சியை 1 லட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பார்வையிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜவுளி இயந்திரங்கள் மற்றும் பொறியியல் துறைக்கான ஒரு மாபெரும் உலகளாவிய கண்காட்சியாக இது நடைபெற உள்ளது. 'மேக் இன் இந்தியா', 'தற்சார்பு இந்தியா', 'பிஎம் மித்ரா பார்க்ஸ்' மற்றும் 'தேசிய தொழில்நுட்ப ஜவுளித் திட்டம்' போன்ற இந்தியாவின் முக்கிய முன்முயற்சிகளுடன் இந்த நிகழ்வு இணைந்து செயல்படுகிறது. வெறும் ஆடைகளை உற்பத்தி செய்யும் நாடு என்ற நிலையிலிருந்து, ஜவுளிப் பொறியியல், கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த உற்பத்தியில் இந்தியா உலகளாவிய தலைவராக உருவெடுத்துள்ளதை இது காட்டுகிறது."மிஜிவிணி ழிணிஙீஜி" என்ற தலைப்பில் இந்தக் கண்காட்சி, மேம்பட்ட ஜவுளி இயந்திரங்கள் மற்றும் அடுத்த தலைமுறை ஜவுளித் தொழில்நுட்பங்களில் இந்தியாவின் வளர்ந்து வரும் திறன்களைக் வெளிக்காட்டும் ஒரு முக்கியத் தளமாகச் செயல்படும். சுற்றுச்சூழலுக்கு உகந்த உற்பத்தி, வளங்களைச் சரியாகப் பயன்படுத்துதல் ஆகியவற்றில் சிறப்புக் கவனம் செலுத்தப்படும். மேலும், சுற்றுச் சூழலுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைக்கும் அதே வேளையில், உற்பத்தியைப் பெருக்கும் அதிநவீன தீர்வுகளையும் வழங்க உள்ளது. ஜவுளி உற்பத்தியை முற்றிலும் மாற்றியமைக்கும் ஆட்டோமேஷன், செயற்கை நுண்ணறிவு மற்றும் மேம்பட்ட இயந்திரங்களில் ஏற்பட்டுள்ள புதிய கண்டுபிடிப்புகளை இதில் இடம் பெற உள்ளது. இந்திய உற்பத்தியாளர்களை சர்வதேசச் சந்தைகள் மற்றும் கூட்டாளர்களுடன் இணைப்பதன் மூலம், இந்தியா ஒரு நம்பகமான மற்றும் எதிர்காலத்திற்குத் தயாரான ஜவுளி மையமாக இருப்பதையும் இந்த கண்காட்சி உறுதிப்படுத்தும். திறன் மேம்பாடு, தொழில்நுட்பப் பரிமாற்றம் மற்றும் ஏற்றுமதி சார்ந்த வளர்ச்சியை ஆதரிப்பதன் மூலம், உலகளாவிய ஜவுளிப் பொறியியல் நிபுணர்கள் ஒன்றிணையக் கூடிய முக்கிய இடமாக இந்தியாவின் பங்கை இது வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. 'இந்தியா ஐடிஎம்இ 2026' வழங்கும் இது வெறும் கண்காட்சி மட்டுமல்ல – ஒரு முழுமையான வணிகச் சூழலாகவும் அமைய உள்ளது.



# இந்தியா ஐடிஎம்இ 2026' சர்வதேச ஜவுளி இயந்திரக் கண்காட்சி நொய்டாவில் டிசம்பர் 4ம் தேதி துவக்கம்




கோவை, ஆக. 12-
ஜவுளி உற்பத்தித் துறையில் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தும் வகையில், 'இந்தியா ஐடிஎம்இ 2026' சர்வதேச ஜவுளி இயந்திரக் கண்காட்சி நொய்டாவில் டிசம்பர் 4ந்தேதி முதல் 9ந்தேதி வரை நடைபெற உள்ளது.

இது தொடர்பான செய்தியாளர் சந்திப்பு, கோவை விமான நிலையம் அருகே உள்ள தனியார் நட்சத்திர ஓட்டலில் நடைபெற்றது. இதில், இந்தியா ஐடிஎம்இ சங்கத்தின் தலைவர் கேத்தன் சங்வி, நிர்வாக இயக்குநர் டாக்டர் சீமா ஸ்ரீவத்சவா மற்றும் கௌரவ பொருளாளர் எஸ். செந்தில் குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

6 நாட்கள் நடைபெற உள்ள இந்தக் கண்காட்சியில், 95 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் மற்றும் 1,800க்கும் மேற்பட்ட கண்காட்சியாளர்கள் பங்கேற்க உள்ளனர். 2 லட்சத்து 40 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவில், 18 அரங்குகளில் கண்காட்சி நடைபெற உள்ளது. கண்காட்சியை 1 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பார்வையிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. உலகளாவிய ஜவுளித் துறையை இணைக்கும் முக்கிய தளமாக இந்தக் கண்காட்சி அமையும் என தெரிவிக்கப்பட்டது. நார், நூல், துணி முதல் ஆடை மற்றும் தொழில்நுட்ப ஜவுளிகள் வரை, ஜவுளித் துறையின் பல்வேறு நிலைகளில் பயன்படுத்தப்படும் அதிநவீன இயந்திரங்கள் மற்றும் புதிய தொழில்நுட்பங்கள் கண்காட்சியில் இடம்பெற உள்ளன. குறிப்பாக, தானியங்கி தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, மின்னணுமயமாக்கல், மேம்பட்ட இயந்திரங்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த உற்பத்தி முறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட உள்ளது.

'ஐடிஎம்இ நெக்ஸ்ட்' என்ற கருத்தாக்கத்துடன் நடைபெறும் இந்தக் கண்காட்சியின் ஒரு பகுதியாக, 'ஜவுளி எதிர்காலம் 2026' என்ற சர்வதேச தொழில்நுட்ப மாநாடும் நடைபெற உள்ளது.இதில் உலகளாவிய ஜவுளித் துறை வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொழில்நுட்பத் தலைவர்கள் பங்கேற்று, ஜவுளி உற்பத்தியின் எதிர்காலம், புதிய கண்டுபிடிப்புகள், தானியங்கி தொழில்நுட்பம், மின்னணுமயமாக்கல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து விவாதிக்க உள்ளனர். புதிய தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ளவும், சர்வதேச சந்தைகளில் வர்த்தக வாய்ப்புகளை உருவாக்கவும், புதிய வாடிக்கையாளர்களை பெறவும் இந்தக் கண்காட்சி உதவும் என தெரிவிக்கப்பட்டது.

கோவையைச் சேர்ந்த ஜவுளி உற்பத்தியாளர்கள், தொழிலதிபர்கள் மற்றும் ஜவுளிப் பொறியியல் துறையினர் கண்காட்சியில் அதிக அளவில் பங்கேற்று பயன்பெற வேண்டும் என செய்தியாளர் சந்திப்பில் அழைப்பு விடுக்கப்பட்டது.

# நொய்டாவில் நடக்கும் சர்வதேச ஜவுளி இயந்திரக் கண்காட்சியில் பங்கேற்க சேலம் ஜவுளி உற்பத்தியாளர்களுக்கு அழைப்பு

சேலம், ஆகஸ்ட் 21 நொய்டாவில் டிசம்பர் 4 முதல் 9 வரை நடைபெறவுள்ள சர்வதேச ஜவுளி இயந்திரக் கண்காட்சியில் பங்கேற்குமாறு சேலத்தைச் சேர்ந்த ஜவுளி உற்பத்தியாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இது குறித்தவிழிப்புணர்வு நிகழ்ச்சி சேலத்தில் நடைபெற்றது. செய்தியாளர்களிடம்பேசிய 'இந்தியா ஐடிஎம்இ' (மிஸீபீவீணீ மிஜிவிணி) சங்கத்தின் பொருளாளர் செந்தில்குமார், உலகளாவிய ஜவுளி உற்பத்தியைமேம்படுத்தவும், புதிய கண்டுபிடிப்புகளைக் காட்சிப்படுத்தவும், உலகளாவிய போட்டித்தன்மையை அதிகரிக்கவும் 12வது சர்வதேச ஜவுளி இயந்திரக்கண்காட்சி நொய்டாவில் நடத்தப்படுவதாகத் தெரிவித்தார். இக்கண்காட்சியில் 95 நாடுகளைச் சேர்ந்த ஜவுளித் துறை நிபுணர்கள்







பங்கேற்பார்கள் என்றும், சுமார் 1,50,000 பார்வையாளர்கள் வருகைதருவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ஜவுளி இயந்திரம் மற்றும் பொறியியல் துறைகளுக்கான ஒரு உலகளாவிய கண்காட்சியாகஇது அமையும் என்று அவர் குறிப்பிட்டார். முன்னதாக, இந்திய வர்த்தக மற்றும் தொழில் சபையின் (

தலைவர் கணேசன்பேசுகையில், "நூல் விலை உயர்வு மற்றும் கடுமையான உலகளாவிய போட்டி காரணமாக கடந்த நான்கு ஆண்டுகளாக இந்தியாவின் ஜவுளித் துறையில் எந்த வளர்ச்சியும் இல்லை. சீனா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகள் நூலை அதிகளவில் விநியோகம் செய்கின்றன. தமிழகம்முழுவதும் ஏராளமான ஜவுளி ஆலைகள் மூடப்பட்டுள்ளன. இக்கட்டான நிலையில் உள்ள இத்துறையை நாம் மேம்படுத்த வேண்டும். இக்கண்காட்சி இத்துறையை மீட்டெடுக்கவும், இந்தியா தனது உச்சநிலையை மீண்டும் அடையவும் உதவும்," என்று கூறினார். இந்நிகழ்ச்சியில் பொதுச் செயலாளர் சம்பத்குமார் மற்றும் பல ஜவுளி உற்பத்தியாளர்கள் கலந்துகொண்டனர்.

---

நார், நூல், துணி வகைகள் முதல் தயாரிக்கப்பட்ட ஆடைகள் மற்றும் தொழில்நுட்ப ஜவுளிகள் வரை, ஜவுளித்துறையின் பல்வேறு

பார்வையிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

'மேக் இன் இந்தியா', 'தற்சார்பு இந்தியா', 'பிஎம் மித்ரா பார்க்ஸ்' மற்றும் 'தேசிய

2026' என்ற சர்வதேச தொழில்நுட்ப மாநாட்டில் ஜவுளி உற்பத்தியின் எதிர்காலம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, புதிய கண்டுபிடிப்புகள்,

உற்பத்தித் திறன் மற்றும் உலகளாவிய போட்டித் தன்மையை மேம்படுத்திக் கொள்ளலாம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

ளர்கள் பங்கேற்க உள்ளனர்.
இந்த கண்காட்சி நார், நூல்

---



## ...ந் தேதி தொடங்குகிறது ...யந்திர கண்காட்சி!

...ளும் திறன் கொண்ட தொழில்நுட்ப பணியாளர்களுக்கான தேவை அதிகரித்து வருகிறது.

தொழில்நுட்ப வளர்ச்சி வேலைவாய்ப்புகளை குறைப்பதற்கு பதிலாக, புதிய திறன்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கி வருகிறது. நவீன இயந்திரங்களை இயக்குதல், பராமரித்தல், தொழில்நுட்ப மேலாண்மை, தரக்கட்டுப்பாடு உள்ளிட்ட பணிகளில் திறன் வாய்ந்த பணியாளர்களுக்கான தேவை எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கும்.

உலகளவில் ஜவுளித்துறையில் இந்தியாவின் வர்த்தகம் தொடர்ந்து வளர்ந்து வருகிறது. நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதன் மூலம் இந்திய நிறுவனங்கள் உற்பத்தித்திறன், தரம் மற்றும் ஏற்றுமதியை மேலும் அதிகரிக்க முடியும். சர்வதேச போட்டி அதிகரித்து வரும் நிலையில், உலகத்தரத்திற்கு ஏற்ப உற்பத்தி செய்ய நவீன இயந்திரங்கள் மற்றும் தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வது அவசியம்.

ITME 2026 கண்காட்சி மூலம் உலகின் பல்வேறு நாடுகளில் பயன்படுத்தப்படும் நவீன ஜவுளித்தொழில்நுட்பங்களை இந்திய நிறுவனங்கள் நேரடியாக அறிந்து கொள்ள முடியும். மேலும், வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் இந்திய தொழில் நிறுவனங்களுக்கு இடையே நேரடி வர்த்தக தொடர்புகள், புதிய முதலீடுகள் மற்றும் வர்த்தக வாய்ப்புகளை உருவாக்கவும் இந்த கண்காட்சி முக்கிய தளமாக அமையும்.

95 நாடுகளை சேர்ந்தவர்கள் மற்றும் 1,800க்கும் மேற்பட்ட கண்காட்சியாளர்கள்பங்கேற்க உள்ளதால், ITME 2026 கண்காட்சி இந்திய ஜவுளித்துறையின் தொழில்நுட்ப வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---



# நொய்டாவில் டிசம்பர் 4 முதல் 9 வரை நடக்கும் சர்வதேச ஜவுளி இயந்திர கண்காட்சி

## சேலம் ஜவுளி உற்பத்தி துறையினருக்கு அழைப்பு மற்றும் ரோடுஷோ நிகழ்ச்சி

சேலம், ஆக. 21:

நொய்டாவில் டிசம்பர் 4 ஆம் தேதி முதல் 9ஆம் தேதி வரை சர்வதேச ஜவுளி இயந்திர கண்காட்சி நடைபெற உள்ளது இதில் பங்கேற்க சேலம் ஜவுளி உற்பத்தி துறையினருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. சர்வதேச ஜவுளி இயந்திர கண்காட்சி வரும் டிசம்பர் மாதம் நொய்டாவில் நடக்கிறது. இது குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி, சேலத்தில் நடைபெற்றது.

இதுபற்றி இந்திய ஐடிஎம்இ சொசைட்டி பொருளாளர் செந்தில்குமார் செய்தியாளர்களிடம் கூறுகையில்,

"சர்வதேச அளவில் ஜவுளி உற்பத்தி, புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் உலகளாவிய போட்டித்தன்மையை மேம்படுத்த, 12வது சர்வதேச ஜவுளி இயந்திர கண்காட்சி வரும் டிசம்பர் 4 முதல் 9ம் தேதி வரை நொய்டாவில் நடக்கிறது. உலகின் 95 நாடுகளைச் சேர்ந்த ஜவுளி தொழில் சார்ந்த நிபுணர்கள் இதில் கலந்து கொள்கின்றனர். பார்வையாளர்களாக 1.50 லட்சம் பேர் பங்கேற்பார்கள்




என எதிர்பார்க்கப்படுகிறது. ஜவுளி இயந்திரங்கள் மற்றும் பொறியியல் துறைக்கான உலகளாவிய கண்காட்சியாக இது நடத்தப்படுகிறது" என்றார்.

முன்னதாக இந்திய வர்த்தக மற்றும் தொழில்சபையின் தலைவர் கணேசன் பேசும்போது,

"இந்தியா வில் கடந்த 4 ஆண்டுகளாக ஜவுளி துறையில் வளர்ச்சி இல்லை நூல் விலை உயர்வு, உலகளாவிய கடும் போட்டி போன்றவையே இதற்கு காரணம். சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் நூலை அதிகமாக வழங்குகிறார்கள். தமிழகம் முழுவதும் பல்வேறு ஜவுளி நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. நலிவடைந்துள்ள நிலையை மேம்படுத்த வேண்டும். சரிவை மீட்டெடுத்து, இந்தியா மீண்டும் உச்ச நிலையை எட்டுவதற்கு இந்த சர்வதேச கண்காட்சி உதவியாக இருக்கும்" என்றார்.

இந்நிகழ்ச்சியில், பொதுச் செயலாளர் சம்பத்குமார் மற்றும் ஜவுளி உற்பத்தியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# ஜவுளி உற்பத்தி மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு முக்கியத்துவம் : நொய்டாவில் இந்திய சர்வதேச ஜவுளி இயந்திரக் கண்காட்சி

சேலம்.ஆக.14–

எதிர்காலத்திற்கு ஏற்ற ஜவுளி மற்றும் தொழில்நுட்பச் சூழலை உருவாக்கும் நோக்கில், இந்திய ஐடிஎம்இ சொசைட்டி சார்பில் நொய்டாவில் டிசம்பர் 4 முதல் 9–ஆம் தேதி வரை 6 நாட்கள் இந்தியா ஐடிஎம்இ 2026 கண்காட்சி நடைபெற உள்ளது. இதுகுறித்த ரோடு ஷோ சேலம் ராடிசன் ஓட்டலில் நடைபெற்றது. இந்தக் கண்காட்சியில் 95 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் மற்றும் 1,800–க்கும் மேற்பட்ட கண்காட்சியாளர்கள் பங்கேற்க உள்ளனர். நார், நூல், துணி முதல் தயாரிக்கப்பட்ட ஆடைகள் மற்றும் தொழில்நுட்ப ஜவுளிகள் வரை பல்வேறு பிரிவுகளில் நவீன இயந்திரங்கள், புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில்நுட்பங்கள் காட்சிப்படுத்தப்பட உள்ளன. இந்திய ஐடிஎம்இ சொசைட்டி நடத்தும் 12–வது கண்காட்சியான இது, சுமார் 2 லட்சத்து 40 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவில் 18 அரங்குகளில் நடைபெற உள்ளது. இதனை 1 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பார்வையிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. 'மேக் இன் இந்தியா', 'தற்சார்பு இந்தியா', 'பிஎம் மித்ரா பார்க்ஸ்' உள்ளிட்ட முக்கியத் திட்டங்களுடன் இணைந்து நடைபெறும் இக்கண்காட்சியில் ஆட்டோமேஷன், செயற்கை நுண்ணறிவு, டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் 'இண்டஸ்ட்ரி 4.0' தொழில்நுட்பங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட உள்ளது. மேலும், 'டெக்ஸ்டைல் ஹொரைசன்ஸ் 2026' என்ற சர்வதேச தொழில்நுட்ப மாநாடு மற்றும் தலைமை நிர்வாகிகள் மாநாடு நடைபெற உள்ளது. இதில் உலகளாவிய நிபுணர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொழில்நுட்பத் தலைவர்கள் பங்கேற்று ஜவுளித் துறையின் எதிர்காலம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி குறித்து விவாதிக்க உள்ளனர். சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஜவுளி உற்பத்தியாளர்கள் மற்றும் தொழில் துறையினர் கண்காட்சியில் பங்கேற்று பயன்பெறுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.




சேலம்

# நொய்டாவில் சர்வதேச ஜவுளி இயந்திரக் கண்காட்சி

## சேலம் ஜவுளி உற்பத்தி துறையினருக்கு அழைப்பு

**சேலம், ஆக. 13:** உத்தரப்பிரதேச மாநிலம், நொய்டாவில் டிச. 4 முதல் டிச. 9 வரை சர்வதேச ஜவுளி இயந்திரக் கண்காட்சி நடைபெற உள்ளது. இதில் பங்கேற்க சேலம் ஜவுளி உற்பத்தி துறையினருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து இந்திய ஐடிஎம்இ சொசைட்டி பொருளாளர் செந்தில்குமார் செய்தியாளர்களிடம் கூறியது:

சர்வதேச அளவில் ஜவுளி உற்பத்தி, புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் உலகளாவிய போட்டித் தன்மையை மேம்படுத்த 12–ஆவது சர்வதேச ஜவுளி இயந்திரக் கண்காட்சி வரும் டிச. 4 முதல் 9 வரை நொய்டாவில் நடைபெறுகிறது.

இந்த கண்காட்சியில் உலகின் 95 நாடுகளைச் சேர்ந்த ஜவுளி தொழில்சார்ந்த நிபுணர்கள் பங்கேற்க உள்ளனர். இதில், நார், நூல் மற்றும் துணி வகைகள் முதல் முழுமையாக தயாரிக்கப்பட்ட ஆடைகள்வரை, ஜவுளித் துறையில் அதிநவீன கண்டுபிடிப்புகள், புதிய தொழில்நுட்பங்கள் காட்சிப்படுத்த உள்ளன. ஜவுளி இயந்திரங்கள் மற்றும் பொறியியல் துறைக்கான உலகளாவிய கண்காட்சியாக இது இருக்கும் என்றார்.

முன்னதாக, இந்திய வர்த்தக மற்றும் தொழில்சபையின் தலைவர் கணேசன் பேசுகையில், இந்தியாவில் நூல் விலை உயர்வு உள்ளிட்ட காரணங்களால் கடந்த 4 ஆண்டுகளாக ஜவுளித் தொழிலில் வளர்ச்சி இல்லை. எனவே, நலிவடைந்த நூல் ஆலைகள் புத்துயிர் பெற இதுபோன்ற கண்காட்சிகள் உதவும் என்றார்.

இந்நிகழ்ச்சியில், பொதுச் செயலாளர் சம்பத்குமார் மற்றும் ஜவுளி உற்பத்தியாளர்கள் பங்கேற்றனர்.



நொய்டாவில் நடைபெற உள்ள சர்வதேச ஜவுளி இயந்திரக் கண்காட்சி குறித்து விளக்கிய ஐடிஎம்இ சொசைட்டி பொருளாளர் செந்தில்குமார். உடன், இந்திய வர்த்தக மற்றும் தொழில் சபையின் தலைவர் கணேசன்.

# Textile manufacturers invited to participate in exhibition

**The Hindu Bureau**
SALEM

The India ITME society has invited Salem textile manufacturers to participate in the 12th edition of the international textile machinery exhibition to be held at Greater Noida between September 4 and 9.

In a release, Seema Srivastava, executive director of the society, stated that they are showcasing cutting-edge innovations, advanced technologies and sustainable solutions spanning the entire textile value chain from fibre, yarn and fabric to finished products and technical textiles.

This will be the largest exhibition, spread across 18 exhibition halls covering about 2.40 lakh sq. m., connecting the global textile industry with 1,800-plus exhibitors, representation from 95-plus countries and over 1.50 lakh expected visitors.

# 95 நாடுகள் பங்கேற்கும் இந்திய சர்வதேச ஜவுளி இயந்திர கண்காட்சி

## நொய்டாவில் டிசம்பர் 4 முதல் 9 வரை நடைபெறுகிறது: ஈரோடு ஜவுளி உற்பத்தி துறையினருக்கு அழைப்பு



ஈரோடு, ஆக. 14:

ஈரோடு டெக்ஸ்வேலியில் நடைபெற்ற ஜவுளி உற்பத்தி துறையினர் உடனான சந்திப்பின்போது இந்திய ஐடிஎம்இ சொசைட்டியின் பொருளாளர் எஸ்.செந்தில்குமார் பேசியதாவது,

எதிர்காலத்துக்கு ஏற்ற ஜவுளி மற்றும் தொழில்நுட்ப சூழலை உருவாக்க இந்திய ஐடிஎம்இ சொசைட்டி சார்பில் நொய்டாவில் டிசம்பர் 4ம் தேதி முதல் டிசம்பர் 9ம் தேதி வரை 6 நாட்கள் இந்திய சர்வதேச ஜவுளி இயந்திர கண்காட்சி நடைபெற உள்ளது.

இதில் 95 நாடுகளை சேர்ந்த பிரதிநிதிகள், 1,800க்கும் மேற்பட்ட கண்காட்சியாளர்கள் பங்கேற்க உள்ளனர்.

இந்த கண்காட்சி நார், நூல் மற்றும் துணி வகைகள் முதல்முழுமையாக தயாரிக்கப்பட்ட ஆடைகள் மற்றும் தொழில்நுட்ப ஜவுளிகள் வரை ஒட்டுமொத்த ஜவுளித்துறைக்கான அதிநவீன கண்டுபிடிப்புகள், புதிய தொழில்நுட்பங்கள் காட்சிப்படுத்தப்பட உள்ளன.2 லட்சத்து 40 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவில், 18 அரங்குகளில் இக்கண்காட்சி நடைபெற உள்ளது. ஜவுளி உற்பத்தியை முற்றிலும் மாற்றியமைக்கும் ஆட்டோமேஷன், செயற்கை நுண்ணறிவு மற்றும் மேம்பட்ட இயந்திரங்களில் ஏற்பட்டுள்ள புதிய கண்டுபிடிப்புகளும், கருத்தரங்குகள், குழு விவாதங்கள், துறைசார் வல்லுநர்களின் உரையாடல்களும் இடம்பெற உள்ளன. இதில் ஈரோடு ஜவுளி உற்பத்தித் துறையினர் திரளான பங்கேற்ற பயன்பெற வேண்டும், என்றார்.

இந்நிகழ்வில் ஈரோடு சி ஐ ஐ சேர்மன் வி.பி சிவசுப்பிரமணியம் தமிழ்நாடு நெசவாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்புமாநில பொதுச் செயலாளர், பா.கந்தவேல்,ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த ஜவுளி உற்பத்தித் துறையினர் பலர் பங்கேற்றனர்.

# 95 நாடுகள் பங்கேற்கும் சர்வதேச ஜவுளி இயந்திர கண்காட்சி ஈரோடு ஜவுளி உற்பத்தி துறையினருக்கு அழைப்பு

ஈரோடு, ஆகஸ்ட் . 13

எதிர்காலத்திற்கு ஏற்ற ஜவுளிமற்றும்தொழில்நுட்பச் சூழலை உருவாக்க இந்திய ஐடிஎம்இ சொசைட்டி சார்பில் நொய்டாவில் டிசம்பர் 4ந்தேதி முதல் 9ந்தேதி வரை 6 நாள் இந்திய சர்வதேச ஜவுளி இயந்திரக் கண்காட்சி நடைபெற உள்ளது. இதில் 95 நாடுகளைச் சேர்ந்த பிரதி நிதிகள், 1,800க்கும் மேற்பட்ட கண்காட்சியாளர்கள் பங்கேற்க உள்ளனர். இது குறித்த விளக்க கூட்டத்தில் இந்தியா ஐடிஎம்இ சொசைட்டி பொருளாளர் செந்தில் குமார் கூறியதாவது, ஈரோடு டெக்ஸ் வேலியில் நடைபெற்றது. ஜவுளிமற்றும் ஜவுளிப் பொறி யியல் துறையில் இந்தியா ஒரு உலகளாவிய மையமாக இருப்பதை வலுப்படுத்தும் வகையிலும் இந்தியாவின் தேசியக் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்லும் வகையிலும் 'இந்தியா ஐடிஎம்இ 2026' கண்காட்சி நடைபெற உள்ளது. இந்த நிகழ்வு முக்கியப் பங்கு வகிக்கும். இந்தக் கண்காட்சியில் நார், நூல் மற்றும் துணி வகைகள் முதல் முழுமையாகத் தயாரிக்கப்பட்ட ஆடைகள் மற்றும் தொழில்நுட்ப ஜவுளிகள் வரை ஒட்டுமொத்த ஜவுளித் துறைக்கான அதிநவீன கண்டுபிடிப்புகள், புதிய தொழில்நுட்பங்கள் காட்சிப்படுத்தப்பஉள்ளன.

இது இந்திய ஐடிஎம்இ சொசைட்டி நடத்தும் 12வது கண்காட்சியாகும். இதுவரை இல்லாத வகையில் சுமார் 2 லட்சத்து 40 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவில் 18 அரங்குகளில் நடைபெறும் மிகப்பெரிய கண்காட்சியாக இது இருக்கும். உலகளாவிய ஜவுளித் துறையை இணைக் கும் இந்த கண்காட்சியை 1 லட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பார்வை



யிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கண்காட்சிக்கு வருபவர் கள், 'நூல் முதல் ஆடை வரை' அனைத்துத் தேவை களுக்கும் முழுமை யான தீர்வுகளை வழங்கும் தொழில்நுட்பங்களை இங்கு காண முடியும். புதிய வாடிக்கையாளர்களைப் பெறுதல், புதிய நாடுகளின் பங்கேற்பு, எதிர்காலத் தொழில்நுட்பங்களை அறிந்துகொள்ளுதல் மற்றும் உயர்மட்டத் தொழில்நுட்ப விவாதங்கள் என எண்ணற்ற வாய்ப்புகளை 'இந்தியா ஐடிஎம்இ 2026' வழங்கும். இது வெறும் கண்காட்சி மட்டுமல்ல ஒரு முழுமையான வணிகச் சூழலாகவும் அமைய உள்ளது.

ஈடுஇணையற்ற இந்த மாநாட்டில், உலகளாவிய நிபுணர்கள், ஆராய்ச்சியாளர் கள் மற்றும் தொழில்நுட்பத் தலைவர்கள் பங்கேற்கிறார் கள். அவர்கள் ஜவுளி உற்பத்தியின் எதிர்காலம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, புதிய கண்டுபிடிப்புகள், ஆட்டோமேஷன், டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் வளரும் தொழில்நுட்பங்கள் குறித்து விவாதிக்க இருக்கிறார்கள்.

எனவே இந்த சர்வதேச ஜவுளிஇயந்திர கண்காட்சியில் ஈரோடு ஜவுளி உற்பத்தி துறையினர் அதிக அளவில் கலந்து கொண்டு பயன் பெற வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார் .

# நொய்டாவில் சர்வதேச ஜவுளி இயந்திரக் கண்காட்சி: ஜவுளி உற்பத்தி, ஏற்றுமதியாளர்களுக்கு அழைப்பு

திருப்பூர், ஆக.13: நொய்டாவில் நடைபெறவுள்ள இந்திய சர்வதேச ஜவுளி இயந்திரக் கண்காட்சியில் பங்கேற்க திருப்பூர் ஜவுளி உற்பத்தி, ஏற்றுமதியாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்துக்கேற்ற ஜவுளி மற்றும் தொழில்நுட்பச் சூழலை உருவாக்க இந்திய ஐடிஎம்இ சொஸைட்டி சார்பில் நொய்டாவில் டிசம்பர் 4 முதல் 9-ஆம் தேதி வரை 6 நாள் இந்திய சர்வதேச ஜவுளி இயந்திரக் கண்காட்சி நடைபெற உள்ளது. இதில் 95 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள், 1,800-க்கும் மேற்பட்ட கண்காட்சியாளர்கள் பங்கேற்க உள்ளனர். இந்நிலையில், இதுகுறித்த ரோடு ஷோ திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில் பங்கேற்ற இந்திய ஐடிஎம்இ சொஸைட்டி தலைவர் கேத்தன் சாங்வி, செயல் இயக்குநர் சீமா ஸ்ரீவத்சவா, பொருளாளர் செந்தில்குமார் ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ஜவுளி மற்றும் ஜவுளி பொறியியல் துறையில் இந்தியா ஓர் உலகளாவிய மையமாக இருப்பதை வலுப்படுத்தும்வகையிலும், தேசியக் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்லும் வகையிலும் இந்தியா ஐடிஎம்இ கண்காட்சி நடைபெற உள்ளது.

இதில் நார், நூல் மற்றும் துணி வகைகள் முதல் முழுமையாக தயாரிக்கப்பட்ட ஆடைகள் மற்றும் தொழில்நுட்ப ஜவுளிகள் வரை ஒட்டுமொத்த ஜவுளித் துறைக்கான அதிநவீன கண்டுபிடிப்புகள், புதிய தொழில்நுட்பங்கள் காட்சிப்படுத்தப்பட உள்ளன.

ஜவுளி இயந்திரங்கள் மற்றும் பொறியியல் துறைக்கான ஓர் உலகளாவிய கண்காட்சியாக நடைபெற உள்ளது.

ஜவுளி உற்பத்தியை முற்றிலும் மாற்றியமைக்கும் ஆட்டோமேஷன், செயற்கை நுண்ணறிவு மற்றும் மேம்பட்ட இயந்திரங்களில் ஏற்பட்டுள்ள புதிய கண்டுபிடிப்புகள் இடம்பெற உள்ளன. சர்வதேச சந்தைகள் மற்றும் கூட்டாளர்களுடன் இணைப்பதன் மூலமாக, இந்தியா ஒரு நம்பகமான மற்றும் எதிர்காலத்துக்கு தயாரான ஜவுளி மையமாக இருப்பதையும் இந்தக் கண்காட்சி உறுதிப்படுத்தும் என்றனர்.



திருப்பூர் தொழில்துறையினருக்கு அழைப்பு விடுத்த ஐடிஎம்இ அமைப்பினர்.

# நொய்டாவில் டிச.4 முதல் சர்வதேச ஜவுளி இயந்திரக் கண்காட்சி!

கோவை,ஆக 12

ஜவுளித் துறையில் புதிய தொழில்நுட்ப வளர்ச்சிகள் மற்றும் நவீன இயந்திரங்களை அறிமுகப்படுத்தும் வகையில், இந்திய சர்வதேச ஜவுளி இயந்திரக் கண்காட்சி நொய்டாவில் வரும் டிசம்பர் 4 முதல் 9ம் தேதி வரை நடைபெறுகிறது.

95 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் மற்றும் 1,800க்கும் மேற்பட்ட கண்காட்சியாளர்கள் பங்கேற்கும் இந்தக்கண்காட்சியில், நூல் உற்பத்தி, நெசவு, துணிதயாரிப்பு முதல் ஆடை உற்பத்தி வரையிலான பல்வேறு நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் இயந்திரங்கள் காட்சிப்படுத்தப்பட உள்ளன.


இதுதொடர்பாககோவையில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கண்காட்சியின் தலைவர் கேதன் சங்வி, பொருளாளர் செந்தில் குமார் மற்றும் செயல் இயக்குனர் சீமா ஸ்ரீவஸ்தவா ஆகியோர் பேசினர்.

அப்போது, தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப ஜவுளித் துறையிலும் வேலை வாய்ப்புகளுக்கான புதிய வாய்ப்புகள் உருவாகி வருவதாகவும், நவீன தொழில்நுட்பங்களை கையாளும் திறன் கொண்ட பணியாளர்களுக்கான தேவை தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் தெரிவித்தனர்.

இந்தக் கண்காட்சி, உலக நாடுகளின்ஜவுளித்தொழில்நுட்பங்களை இந்திய நிறுவனங்கள் அறிந்து கொள்ளவும், சர்வதேச சந்தையில் புதிய வர்த்தக வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ளவும் முக்கிய தளமாக அமையும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். ★★



# நூல் விலை உயர்வு உள்பட பல்வேறு காரணங்களால் நலிவடைந்துள்ள ஜவுளி தொழிலை மேம்படுத்த வேண்டும் வர்த்தகதொழில் சபை தலைவர் எஸ்.கே. கணேசன் பேச்சு




சர்வதேச ஜவுளி எந்திர கண்காட்சி வருகிற டிசம்பர் மாதம் நொய்டாவில் நடக்கிறது. இது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி சேலத்தில் நடந்தது. இதில் இந்தியஐ.டி.எம்.ஐ.சொசைட்டி பொருளாளர் செந்தில்குமார் நிருபர்க ளிடம் கூறியதாவது சர்வதேச அளவில் ஜவுளி உற்பத்தி புதிய கண்டு பிடிப்புகள் மற்றும் உலகளாவிய போட்டி தண்மையை மேம்படுத்த 12வது சர்வதேச ஜவுளி எந்திர கண்காட்சி வருகிற டிசம்பர் மாதம் 4ந் தேதி முதல் 9ந் தேதி வரை நொய்டாவில் நடக்கிறது. உலகின் 95 நாடுகளை சேர்ந்தஜவுளி தொழில் சார்ந்த நிபுணர்கள் இதில் கலந்து கொள்கிறார்கள். பார்வையாளர்களாக 1.5 லட்சம் பேர் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜவுளி எந்திரம் மற்றும் பொறியியல் துறைக்கான உலகாளவிய கண்காட்சியாக இந்த கண்காட்சி நடத்தப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார். முன்னதாக இந்திய வர்த்தக மற்றும் தொழில் சபையின் தலைவர் எஸ்.கே. கணேசன் பேசியதாவதுஇந்தியாவில்கடந்த4ஆண்டுகளாக ஜவுளி துறையில் வளர்ச்சி இல்லை. நூல் விலை உயர்வு, உலகளாவிய கடும் போட்டி போன்றவையே இதற்கு காரணம் சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் நூலை அதிகமாக வழங்குகிறார்கள்.தமிழகம்முழுவதும்பல்வேறு ஜவுளி நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. நலிவடைந்து வரும் ஜவுளி தொழிலை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். சரிவை மீட்டெடுத்து இந்தியா மீண்டும் உச்சநிலையை எட்டுவதற்கு இந்த சர்வதேசகண்காட்சிபெரும்உதவியாகஇருக்கும். இவ்வாறு அவர் கூறினார். பொதுச்செயலாளர் இந்த நிகழ்ச்சியில் சம்பத்குமார் மற்றும் ஜவுளி உற்பத்தியாளர்கள் கலந்து கொண்டனர்.

Wednesday, August 12, 2026
COIMBATORE

# Textile machinery fair to be held in Noida in Dec.

The Hindu Bureau
COIMBATORE

ITME Society will organise the India International Textile Machinery Exhibition 2026 in Noida from December 4 to 9, with more than 1,800 participants.

In its first Indian road show, the ITME Society officials told the media in Coimbatore on Tuesday that the event will showcase cutting-edge innovations, advanced technologies, and sustainable solutions spanning the entire textile value chain – from fibre, yarn and fabric to finished products and technical textiles.

Spread across 18 exhibition halls covering about 2,40,000 sq. metres, the event will have exhibitors from almost 95 countries.

The exhibition is a platform showcasing India's growing capabilities in advanced textile machinery, sustainable manufacturing solutions, and next generation textile technologies.

The focus this year will be on sustainability, digitalisation, automation and Industry 4.0. The ITME Society will organise a technical conference on December 5 and 6 in which global experts, researchers, and technology leaders will discuss the future of textile manufacturing.

There will be CEO conclave on "India's Integrated Textile Transformation: Advanced Materials, Smart Machinery and Strategic Trade Alliances."

The exhibition will also have live demonstration of machinery and buyer-seller meetings.

Prabhu Dhamodharan, convenor of Indian Texpreneurs Federation, said the European apparel imports is dominated by just two players holding more than 50 % share.

The scope was high for India in both, garments and home textiles, in the European and the UK markets. The recent Free Trade Agreements signed with these countries have opened up opportunities for the Indian manufacturers. Hence, the sector is expected to see investments in the coming months, he said.

# ICCI: Textile industry stagnant for 4 years

TIMES NEWS NETWORK

**International Textile Machinery Expo is expected to help India recover from the decline and reach its peak again, said V Ganesan, president, ICCI Salem chapter**

**Salem**: The textile industry has seen no growth over the past four years, largely due to rising yarn prices and intense global competition, according to Indian Chamber of Commerce and Industry president (Salem Chapter) V Ganesan.

Speaking at an awareness programme in Salem on Saturday ahead of the upcoming International Textile Machinery Exhibition (ITME 2026), Ganesan said Tamil Nadu's textile sector has been hit hard, with several companies forced to shut down.

"Countries such as China and Pakistan are supplying more yarn at competitive rates. The weakened situation needs urgent improvement. This international exhibition will help India recover from the decline and reach its peak again," he said.

The ITME Society has announced that the 12th edition of the International Textile Machinery Exhibition will be held in Greater Noida, Uttar Pradesh, from Dec 4 to 9. Treasurer Senthil Kumar told reporters that the event aims at promoting innovation, global competitiveness and international textile production.

Organisers expect participation from 1,800 companies representing 95 countries, with more than 1.5 lakh visitors anticipated. Spread across 2.40 lakh square feet, the exhibition will serve as a global platform for textile machinery and engineering technology.

General secretary Sampath Kumar and several textile manufacturers attended the Salem programme.

NEWSIT

திருப்பூர் நிகழ்வுகள் Follow




BUSINESS

**நொய்டாவில் டிச. 4-9 வரை நடைபெறும் 95 நாடுகள் பங்கேற்கும் 'இந்தியா ஐடிஎம்இ 2026' சர்வதேச ஜவுளி இயந்திரக் கண்காட்சியில் பங்கேற்க திருப்பூர் ஜவுளி உற்பத்தியாளர்களுக்கு இந்தியா ஐடிஎம்இ சொசைட்டி அழைப்பு விடுத்துள்ளது. புதிய தொழில்நுட்பங்களை அறிய 1.5 லட்சம் பேர் வருவர் என எதிர்பார்ப்பு.**

www.newsit.app | 12/08/2026 | திருப்பூர்

0 0

#IndiaITME2026 #JewelleryMachinery #NoidaExpo #ThiruppurIndustry #Automation #AI #TextileHorizons

அன்று வெளியிடப்பட்டது:9 days ago